## 30.11 ஊராட்சி ஒன்றிய ஈப்புகளுக்கு ஓட்டுநர் பணி நியமனத்தில் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் தகுதிவாய்ந்த இரவுக் காவலர்கள், பதிவறை எழுத்தர்கள் மற்றும் கம்மியர் (Mechanic) ஆகியோருக்கு முன்னுரிமை

---

ஊரக வளர்ச்சித் (தி4) துறை

அரசாணை (நிலை) எண். 262 நாள் : 15.12.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 230, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 17.7.97.
2. அரசு கடிதம் எண். 42003/தி4/97–2, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 17.12.97.
3. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண். 40860/97/எப்2, நாள் 11.7.98.
4. அரசாணை (நிலை) எண். 185, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 1.9.98.
5. அரசாணை (நிலை) எண். 191, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 7.9.98.

**ஆணை**

அரசாணை (நிலை) எண். 230, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 17.7.97 ல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்ட ஈப்புகளுக்காக 178 ஈப்பு ஓட்டுநர் பதவிகள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது. ஈப்பு ஓட்டுநர் பதவிகளை நியமனக் குழு மூலம் நியமனம் செய்யப்படும் போது தகுதிவாய்ந்த ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர், உழுவை ஓட்டுநர், உருளை ஓட்டுநர் மற்றும் வாகன துப்புரவாளர் ஆகியோர் முழு தகுதி பெற்றிருந்து வேலை வாய்ப்பகத்திலிருந்து அனுப்பப்பட்ட நபர்களாக இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம் எனவும் படிக்கப்பட்ட பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் ஆணையிடப்பட்டது.

2. அரசாணை (நிலை) எண். 185, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 1.9.98 ல் கூடுதலாக 241 புதிய ஈப்பு ஓட்டுநர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு இப்பணியிடங்கள் ஊராட்சி ஒன்றிய நியமனக்குழு மூலம் நியமனம் செய்யப்படலாம் என்றும் அப்போது தகுதிவாய்ந்த ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர், உழுவை ஓட்டுநர், உருளை ஓட்டுநர் மற்றும் வாகன துப்புரவாளர் ஆகியவர்களுக்கு முந்தைய ஆண்டை போல் முன்னுரிமை அளிக்க வேண்டுமென, அரசு ஊரக வளர்ச்சி இயக்குநரைக் கேட்டுக் கொண்டது. தற்போது, இயக்குநர் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் இரவுக் காவலர்கள், பதிவறை எழுத்தர்கள் மற்றும் கம்மியரை (Mechanic) யும் ஓட்டுநர் பதவிக்கு போதிய தகுதிகள் பெற்றிருந்தால் ஊராட்சி ஒன்றிய நியமனக்குழு மூலம் ஈப்பு ஓட்டுநராக நியமனம் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கலாம் என்று பரிந்துரைத்துள்ளார்.

3. தற்போது அரசாணை (நிலை) எண். 191, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 7.9.98 ல் ஊரக வளர்ச்சி உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள நியமனக் குழுக்கள் பணியிடங்களுக்கு நேரிடை நியமன முறையில் நபர்களை தேர்ந்தெடுக்க கீழ்க்கண்டவாறு விதிமுறைகள் வெளியிட்டு ஆணையிடப்பட்டுள்ளது:–

1. நியமனக்குழு தேர்ந்தெடுக்கும் அனைத்து பணியிடங்களுக்கும் இட ஒதுக்கீடு அடிப்படையில் சுழற்சி முறையை (Communal Rotation) கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.
2. வேலை வாய்ப்பகத்திலிருந்து கல்வி மற்றும் வயது தகுதியுள்ளவர்கள் பெயர்கள் அடங்கிய பட்டியல்கள் பெற்று அதில் கண்டுள்ளவர்களின் பெயர்களில் இருந்து தான் பெயர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.
3. வேலை வாய்ப்பகத்திலிருந்து பெறப்படும் பட்டியலில் கண்டுள்ள பெயர்களின் மேலே (1)–ல் உள்ள விதிமுறைப்படி பதிவு மூப்பு அடிப்படையில் தான் நியமனங்கள் செய்யப்பட வேண்டும். ஒரு வேளை பட்டியல்களில் உள்ள பெயர்களில் எவரேனும் தகுதியுள்ளவர்களாக இருந்து நியமனக்குழு கூடும் நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் நியமனம் செய்வதற்கான அதிகபட்ச வயதை அடைவதாக இருந்தால் அவர்களின் பெயர்களுக்கு முன்னுரிமை அளித்து தேர்ந்தெடுக்கலாம், மற்றும்
4. நியமனக் குழுக்களின் கூட்டத்தை எப்பொழுதெல்லாம் தேவையோ, அப்பொழுதெல்லாம் குழுத்தலைவர் கூட்டலாம். அவ்வாறு நடைபெறும் கூட்டத்தில் பத்தி 1 ல் இருந்து 3 வரை உள்ள விதிமுறைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பெயர் பட்டியலை மூன்று நாட்களுக்குள் அறுதியிட்டு ஆணைகள் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரியால் வெளியிடப்பட வேண்டும்.

4. அரசு தீவிர பரிசீலனைகுப் பின் ஊரக வளர்ச்சி இயக்குநரது கருத்தினை ஏற்க தீர்மானித்துள்ளது. அதற்கேற்ப புதியதாக தோற்றுவிக்கப்பட்ட ஈப்பு ஓட்டுநர் பணியிடங்களுக்கு, பணியாளர் குழு மூலம் தேர்ந்தெடுக்கும் பொழுது, பணியில் உள்ள அலுவலக உதவியாளர், உழுவை ஓட்டுநர், உருளை ஓட்டுநர் மற்றும் துப்புரவாளர் ஆகியவர்களுக்கு

## 30. PANCHAYAT UNION ESTABLISHMENT

முன்னுரிமை அளிப்பதைப் போல ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் இரவுக் காவலர், பதிவறை எழுத்தர், மற்றும் கம்மியர் ஆகியோர் தகுதியுள்ளவர்களாக இருந்தால் அவர்களுக்கும் முன்னுரிமை அளித்து நியமன குழுவின் மூலம், அரசு ஆணை (நிலை) எண். 191, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 7.9.98–ல் வெளியிடப்பட்ட விதிமுறைகளின்படி தேர்வு செய்யப்பட வேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்கின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்